# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2023 சனவரி

## (203) வணிகச் சட்டம்

### பகுதி - A

**வினா இல. 01**

இவ்வினா 25 புள்ளிகளுக்காக 14 நோக்கச் சோதனை வினாக்களை (OTQs) கொண்டிருந்தது.

பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக குறிப்பிடத்தக்களவான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் **1.10** இல் தரப்பட்ட வினாவுக்கு சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர். அதில் பணச் சலவையில் உள்ள சம்மதப் பாதுகாப்பு என்பதன் கருத்தைச் சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இந்தப் பாடப் பரப்பு பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு, பாடப் புத்தகத்திலும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைவாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

வினா இல. **1.3** இற்கும்கூட பெரும்பாலான பரீட்சார்த்திகளால் தவறான விடைகள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வினாவில் மாற்றத்தகு சாதனங்களின் பண்புகள் பற்றி பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவு பரீட்சிக்கப்பட்டது. அத்தகைய பண்புகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு தேவையான மட்டத்தில் காணப்படவில்லை என்பதை அவர்களது விடைகளிலிருந்து அறியக் கிடைத்தது.

மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்ததுடன் இது பெரும்பாலான பரீட்சார்த்திகள் தமது சித்தி மட்டத்தை அடைவதில் பங்களிப்புச் செய்திருந்தது.

**பகுதி A** இற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிவில் சட்டம், குற்றவியல் சட்டம், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், வர்த்தகச் சட்டம், சர்வதேசச் சட்டம், பணச் சலவைச் சட்டம், மாற்றத்தகு சாதனங்கள் போன்றவை பற்றி பரீட்சார்த்திகள் சிறந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### பகுதி - B

**வினா இல. 02**

இந்த வினா வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது. இது ஓரளவு இலகுவான வினாவாக இருந்ததால் பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்து சிறப்பான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு, வாடகைக்குப் பெற்றவர் இணங்கிக் கொண்டவாறு தவணைக் கட்டணைக்களைச் செலுத்துதல் வேண்டும். இது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின்படி, வாடகைக்குப் பெற்றவரின் முதன்மையான கடப்பாடாகும். வாடகைக்குப் பெறுபவர் உடன்படிக்கை முடிவுறுவதற்கு முன்னர், உடன்படிக்கையின் கீழ் முழுத் தொகையையும் செலுத்துவதன் மூலம் மாத்திரமே வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் ஆதனத்தைக் கொள்வனவு செய்ய முடியும்.

எவ்வாறாயினும், வாடகைக்குப் பெற்றவரால் தவணைக்கட்டணம் செலுத்தத் தவறும்போது அல்லது உடன்படிக்கை மீறப்படும்போது உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கான உரிமை காணப்படுகிறது. அத்துடன் வாடகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் உடமையை உரிமையாளரால் மீளப்பெற முடியும் என்பதுடன் அதில் ஏதாவது சேதம் ஏற்பட்டிருப்பின் அதற்கான உரிமைக் கோரிக்கையையும் விடுக்க முடியும்.

எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகளால் விடயத்தைச் சரியாக பகுப்பாய்வு செய்யவோ சரியாக விடையளிக்கவோ முடியாமல் இருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 03**

**(a)** வினாவின் இந்தப் பகுதியில் வலுவளிப்பினால் உருவாகும் முகவராண்மை பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளித்திருந்தனர் ஆயினும் அவர்களால் சரியான விடைகளை வழங்க முடியவில்லை. எனவே பரீட்சார்த்திகள் முகவராண்மைச் சட்டம் தொடர்பிலான பல்வேறு எண்ணக்கருக்கள் பற்றிய தமது அறிவை மேம்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

எவ்வாறாயினும், வலுவளிப்பு மூலமான முகவராண்மை உருவாகுவதற்கு கீழ்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் :

(1) முகவர் அவரது முதல்வரின் அடையாளத்தை வெளிப்படுத்துதல் வேண்டும்.

(2) முகவரால் ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில், முதல்வர் ஒப்பந்த இயலுமையை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) முகவர், ஒப்பந்தத்தின் சகல பொருண்மை விடயங்களையும் முதல்வருக்கு வெளிப்படுத்தல் வேண்டும்.

(4) முதல்வர் ஒப்பந்தம் முழுவதையும் வலுவளிப்புச் செய்தல் வேண்டும். ஒப்பந்தமொன்றின் ஒரு பகுதிக்கு வழங்கப்பட்ட வலுவளிப்பு செல்லுபடியற்ற வலுவளிப்பாகும்.

(5) வலுவளிப்பானது ஒரு நியாயமான காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டும்.

(6) வலுவளிப்பானது செல்லுபடியான மற்றும் சட்டரீதியாக செயற்படுத்தக்கூடிய ஒப்பந்தங்களுக்கு மாத்திரமே பிரயோகிக்கப்படுகிறது.

எனவே, பரீட்சார்த்திகள் மேற்படி விடயங்களை சரியானவாறு குறித்துரைக்க முடியாமல் இருந்ததால் அவர்களால் திருப்திகரமான அளவுக்கு புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இல்லை.**

**(b)** இந்தப் பகுதி அவசியத்தன்மையால் உருவாகும் முகவராண்மை பற்றிய அறிவைச் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடைகளை அளித்திருந்தனர்.

எவ்வாறாயினும், அவசியத்தன்மையால் உருவாகும் முகவராண்மை நிகழ்வதற்கு கீழ்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் :

(1) முதல்வரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற முடியாத மிகவும் அவசரமான சந்தர்ப்பம் காணப்படுதல்.

(2) அவ்வாறு செயற்படுவதற்கு ஓர் உண்மையான வர்த்தகரீதியான அவசியம் காணப்படுதல்.

(3) முகவரானவர் முதல்வரின் சார்பில் நல்லெண்ணத்துடன் செயற்பட்டிருத்தல் வேண்டும்.

(4) முகவரின் செயற்பாடு நியாயமானதாகவும் விவேகமானதாகவும் இருத்தல் வேண்டும்.

(5) முதல்வர் அதற்கு மாற்றான அறிவுறுத்தல்களை முன்னமே வழங்காதிருந்திருத்தல் வேண்டும்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் மேற்படி விடயங்களைச் சரியாக வழங்கி, சிறப்பான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இந்த வினா பங்குடமைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது பங்குடமைச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாக இருந்தது. இங்கு பங்காளர் ஒருவரின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி பரீட்சிக்கப்பட்டதுடன் பங்குடமை ஒன்றைக் கலைப்பதற்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றிய அறிவும் பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலும் அனைத்து பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு சரியான விடை அளித்திருந்தனர்.

எவ்வாறாயினும், நீதிமன்றமானது பங்குடமையைக் கலைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு போதியதாக இல்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது.
**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

**(a)** இந்தப் பகுதி நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இங்கு சொல்லப்பட்ட சட்டத்தின் நோக்கங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளித்திருந்ததுடன் திருப்திகரமான பதில்களையும் வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள சரியான விடைகளை அளிக்கத் தவறியிருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**(b) & (c)**

இந்தப் பகுதிகள் கணினிக் குற்றங்கள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிகளுக்கு விடையளித்திருந்த போதிலும் அவர்களால் திருப்திகரமான பதில்களை வழங்க முடியவில்லை. சில பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர். பரீட்சார்த்திகள் கணினிக் குற்றங்கள் சட்டம் தொடர்பில் போதிய அறிவினைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் கணினிக் குற்றங்கள் சட்டத்தைப் பற்றி கற்றல் அவசியம்.

இந்தச் சட்டம் கணினிக் குற்றங்களை அடையாளங் காணவும் அத்தகைய குற்றங்களை புலனாய்வு செய்து தடுப்பதற்கான நடைமுறைகளை அளிப்பதற்குமாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சட்டம் ஆகும்.

இந்தச் சட்டத்தின் கீழ் கீழ்வரும் குற்றங்கள் உள்ளடக்கப்படுகின்றன :

(1) கணினியைப் பயன்படுத்துவதற்கான அதிகாரமளிக்கப்படாத அணுகலும் அதிகாரமளிக்கப் படாத அணுகலிலிருந்து பாதுகாப்பும்.

(2) குற்றம் ஒன்றைப் புரியும் நோக்கில் கணினி ஒன்றை அதிகாரமளிக்கப்படாத நிலையில் அணுகுதலும் குற்றம் ஒன்றைப் புரியும் நோக்கில், அதிகாரமளிக்கப்பட்ட நிலையில் கணினியை அணுகுவதிலிருந்து பாதுகாத்தலும்.

(3) எந்தவொரு கணினியிலும் காணப்படுகின்ற ஏதாவதொரு தகவலை அழித்தல், நீக்குதல் அல்லது சிதைத்தல், அல்லது சேர்த்தல், நகர்த்துதல் அல்லது மாற்றுதல்.

(4) தன்வசப்படுத்தல் முறைமைகளைப் பயன்படுத்தி அதிகாரமளிக்கப்படாத அணுகலை மேற்கொள்ளும் மூலங்களிலிருந்து தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்.

(5) கணினிகளில் குற்றங்களைச் செய்ய உதவுதல், தூண்டுதல் மற்றும் சதிசெய்தல்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இல்லை.**

## வினா இல. 06

இந்த வினா பொருள்கள் விற்பனை கட்டளைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் தொடர்பான ஓரளவு இலகுவான வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **பகுதி (a)** இற்கு அரைவாசி சரியான விடைகளை அளித்திருந்ததுடன் **பகுதி (b)** இற்கு தவறான விடைகளை அளித்திருந்தனர். மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை.

**பகுதி (a)** இல், தொடர்புடைய தரப்பினரின் சட்ட உரிமைகளை ஆராயுமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், சீனியானது **யசோ**வின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததால் அதில் ஏற்பட்ட சேதத்திற்கு **தர்ஷிக்கு யசோ** இழப்பீடு வழங்க வேண்டுமென தவறாகக் குறிப்பிட்டிருந்தனர். பொருளின் உடமையானது ஏற்கனவே **தர்ஷிக்கு** மாற்றப்பட்டுவிட்டதால் பொருளானது விநியோகிக்கப்பட்டதோ இல்லையோ எதுவாக இருப்பினும் சீனியில் ஏற்படும் சேதத்திற்கு **யசோ** பொறுப்பாளியாக முடியாது.

**பகுதி (b)** இல், விலை செலுத்தாத விற்பனையாளர் ஒருவர் பொருள்களை மீள் விற்பனை செய்வதை அனுமதிக்கின்ற இரண்டு சந்தர்ப்பங்களை விவரிக்குமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் இந்தப் பாடப் பரப்பு பற்றிய சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

பொருள்களை மீள் விற்பனை செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு :

(1) பொருள்கள் கெட்டுப்போகக்கூடிய தன்மையில் இருக்கும்போது, அதாவது காய்கறிகள், மீன் அல்லது பழங்கள்.

(2) பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு, மீள் விற்பனை செய்யும் உரிமை தக்கவைக்கப்பட்டுள்ளபோது.

(3) விற்பனையாளர் வாங்குபவருக்கு மீள் விற்பனை செய்ய விரும்புவதாக அறிவித்து, அத்தகைய அறிவிப்புக்குப் பின்னரும் வாங்குபவர் நியாயமானளவு காலத்திற்குள் கொடுப்பனவு செய்யவில்லையாயின்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி - C</u>

**வினா இல. 07**

இந்த வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி (A) இந்தப் பகுதி ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.**

**(a)** இங்கு **திருமதி கல்பனா**வுக்கும் **திரு. ஜினிகரனுக்கும்** இடையில் வலிதான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும், சிலர் தரப்பட்ட விவரணத்தை விளங்கிக் கொள்வதில் சிறியளவு குழப்பமடைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. சொல்லப்பட்ட தரப்பினரிடையே ஒரு வலிதான ஒப்பந்தம் காணப்பட்ட போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனைச் சரியாக இனங்காணத் தவறியிருந்தனர்.

**(b)** **திருமதி பொடிமெனிகே** இற்கும் **திரு. ஜினிகரனுக்**குமிடையே வலிதான ஒப்பந்தம் காணப்படுகிறதா என்பதை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், **பொடிமெனிகேயால்** அனுப்பப்பட்ட அஞ்சலட்டையானது **திருமதி கல்பனாவின்** கடிதத்திற்கு முன்னர் **திரு. ஜினிகரனுக்குக்** கிடைக்கப்பெற்றதால், சொல்லப்பட்ட தரப்பினருக்கிடையே வலிதான ஒப்பந்தம் காணப்படுகிறது எனக் குறிப்பிட்டிருந்தனர். பரீட்சார்த்திகள் வலிதான ஒப்பந்தமொன்றிலுள்ள மூலகங்களை விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

**(c)** இங்கு **திரு. வில்பிரட்** இன் சட்ட உரிமைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள், ஏற்கனவே **திருமதி கல்பனாவுக்கு** மோட்டார் வாகனத்தை விற்பதற்கு **திரு. ஜினிகரன்** ஒப்புக்கொண்டதை இனங்காணத் தவறியிருந்தனர். அதற்கிணங்க, **திரு. வில்பிரட்** இற்கு ஏற்பட்ட சேதங்களுக்கு **திரு. ஜினிகரன்** இழப்பீடு வழங்க வேண்டும். வினாவின் இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை அதிகம் திருப்தியற்றதாகக் காணப்பட்டது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இல்லை.**

**பகுதி (B) இந்தப் பகுதி தொழில் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.**

**(a)** பொருத்தமான சோதனைகளின் உதவியுடன் ஊழியருக்கும் சுயாதீன ஒப்பந்ததாரருக்கும் இடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு திருப்தியற்ற வழியில் செயலாற்றியிருந்தனர். அத்துடன், அதிகளவானவர்கள் ஊழியருக்கும் சுயாதீன ஒப்பந்ததாரருக்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காணத் தவறியிருந்தனர். ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே கட்டுப்பாட்டுச் சோதனை, உபகரணச் சோதனை, ஒருங்கிணைப்புச் சோதனை மற்றும் பொருளாதார நேர்வுச் (உண்மை) சோதனை போன்ற தொடர்புடைய சோதனைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இங்கு **சுரக்ஷா** தனது பதவிநிலை ஓர் ஊழியர் பதவிநிலை எனக் கோர முடியுமா என்பதை ஆராயுமாறு கேட்கப்பட்டது. மொத்தத்தில், இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இருக்கவில்லை. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், சுயாதீன ஒப்பந்ததாரர் தொடர்பில் குறைந்தளவான அறிவையே கொண்டிருந்ததால் இந்தப் பகுதிக்கு சரியாக விடையளித்திருக்க வில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்திகரமான மட்டத்தில் இருந்தது..**

\- - -